**தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், கிண்டி, சென்னை – 600 025**
**சுற்றறிக்கை எண்.19201/கே–4/2016, நாள் 15.7.2016**

------

பொருள் பண்டகம் – தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – உபயோகமற்ற / சீர்செய்ய இயலாத / பயிலக இருப்பு பதிவேட்டில் இருப்பில் உள்ள காலங்கடந்த நூலக புத்தகங்கள் ( Outdated Books ), கழிவுத்தாள்கள் மற்றும் தினசரி நாளிதழ்களை ரூ.1000/–க்குள் முதல்வர் நிலையில் கழிவுநீக்கம் செய்ய அனுமதி வழங்கியது – நிதி அளவின் உச்சவரம்பினை உயர்த்துதல் – தொடர்பாக.

பார்வை 1 தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் சுற்றறிக்கை எண்.41021/கே2/2002, நாள் 30.12.2002.

2 தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் சுற்றறிக்கை எண்.44591/கே4/2014, நாள் 1.12.2014.

----

பார்வை (1)–ல் காணும் சுற்றறிக்கையில், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களில் காலங்கடந்த நூலக புத்தகங்கள் ( Outdated Books ) மற்றும் பழைய கழிவுத்தாள்களை ரூ.1000/–க்குள் இருப்பின் முதல்வர் நிலையில் கழிவுநீக்கம் செய்து தகவலை மட்டும் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாணை வழங்கப்பட்டு சுமார் 13 ஆண்டுகள் முழுமையாக முற்றுப்பெற்ற நிலையில், பார்வை (2)–ல் காணும் சுற்றறிக்கையின் தொடர்ச்சியாக, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலக முதல்வர்களிடமிருந்து பயிலகத்தில் காலங்கடந்த நூலக புத்தகங்கள் ( Outdated Books ), பழைய கழிவுத்தாள்கள் மற்றும் தினசரி நாளிதழ்களை கழிவுநீக்கம் செய்ய முதல்நிலை / 2–ம் நிலை மற்றும் 3–ம் நிலை அனுமதி கோரி தொடர்ச்சியாக கருத்துருக்கள் பெறப்பட்டு, துறைத்தலைவரான தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் உரிய அனுமதிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் குறைபாடுள்ள விவரங்களை கோரி பெறுவதில் இயக்ககம் / பயிலகத்திற்கு தேவையற்ற கடித போக்குவரத்து மற்றும் வேலைப்பளு அதிகரிக்கப்படுகிறது.

எனவே அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களில் **உபயோகமற்ற / சீர்செய்ய இயலாத / மீள உபயோகிக்க இயலாத பயிலக இருப்பு பதிவேட்டில் இருப்பில் உள்ள காலங்கடந்த நூலக புத்தகங்கள் ( Outdated Books ), கழிவுத்தாள்கள் மற்றும் தினசரி நாளிதழ்களை** பார்வை (2)–ல் காணும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, **தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் முதல்நிலை ( ஏலம் விட அனுமதி ) அனுமதி பெற்ற பின்னர், ரூ.1,750/–க்குள் ( ரூபாய் ஓராயிரத்து எழுநூற்றி ஐம்பது மட்டும் ) இருப்பின்,** தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் 2–ம் நிலை அனுமதி பெறாமல், அதிக தொகைக்கு ஏலம் எடுத்த நிறுவனத்திடம் முழுத் தொகையும் ( வரித்தொகை உட்பட ) வசூலித்து, அரசுக் கணக்கில் செலுத்தி விட்டு, அச்செலுத்துச்சீட்டின் நகல், பயிலக ரசீதின் நகல், ஏலம் விடப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் ஆகிய விவரத்துடன் இருப்பு நீக்க ஆணை கோரும் கருத்துருவினை அனுப்பி, இருப்பு நீக்க ஆணை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

.. 2 ..

இவ்வாணை உபயோகமற்ற / சீர்செய்ய இயலாத / மீள உபயோகிக்க இயலாத பயிலக இருப்பு பதிவேட்டில் இருப்பில் உள்ள காலங்கடந்த நூலக புத்தகங்கள் ( Outdated Books ), கழிவுத்தாள்கள் மற்றும் தினசரி நாளிதழ்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– சோ. மதுமதி,
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்.

பெறுநர்

முதல்வர் / முதல்வர் (பொறுப்பு),
அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள்,
பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்கள்

நகல் இயக்குநரின் மேஜைக்கு
நகல் நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர்
நகல் தொழில் நுட்ப உதவியாளர் மதிப்பீடு 2
நகல் வட்டார அலுவலர் 2, 4
நகல் உதவி இயக்குநர் ( உள்தணிக்கை)
நகல் உதவி இயக்குநர் ( நிர்வாகம் )
நகல் இயக்குநரின் நேர்முக உதவியாளர்
நகல் கண்காணிப்பாளர் இ, ஜி, ட்டி, எக்ஸ், டபிள்யு மற்றும் கே பிரிவுகள்
நகல் கே 1, கே 2, கே 3 மற்றும் கே 4 இருக்கைக்கு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

திவா
15/7/16

15/7.2016
கண்காணிப்பாளர்.